## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 61/2023 |
| P.W. | : 11 |
| Name. | : திரு. வசந்தகுமார். |
| Father Name | : திரு. மாசிலாமணி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 43 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.11.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூர் மாவட்டம், தனிப்பிரிவு காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01-02-2021ம் தேதி நான் புளியம்பட்டி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 21.00 மணிக்கு விண்ணப்பள்ளி கிராமம், வாலிபாளையம், பொன்னுசாமிகவுண்டர் மகன் கணேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரைப் பெற்று நி.கு.எண்.

21/2021 ச.பி. 302 IPC -ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் சத்தி அவர்களுக்கு துரித தபால் மூலமாக காவலர் 2152 திரு.வி.கே.செந்தில் என்பவர் மூலமாக அனுப்பி வைத்தேன். ஒரு நகலை புலன்விசாரணைக்காக காவல் ஆய்வாளருக்கு சமர்ப்பித்தேன். மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8.** காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ 1 புகாரில் சமுதாய கூடத்திற்கு முன்பாக நின்றுகொண்டு பேசிக்கொண்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். புகாரில் காலால் உதைத்து இறந்துபோனவரை கொலை செய்துவிட்டார் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். சம்பவம் குறித்து பொது நாட்குறிப்பில் பதிவு செய்யவில்லை என்றால் பதிவுசெய்யப்பட்டுள்ளது அது குறித்த விபரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை. மேற்படி கணேசன் புகார் கொடுத்த வந்த சமயத்தில் அவருடன் வேறு யாரும் வரவில்லை என்றால் சுப்புநாயக்கர் வந்தார் ஆனால் வந்ததாக புகாரில் குறிப்பு இல்லை. புகார் கொடுத்த கணேசன் என்பவருக்கு முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகல் வழங்கப்பட்டதா என்றால் ஆமாம். இறந்தவரை எந்த கையால் எதிரி அறைந்தார் என்று குறிப்பாக புகாரில்

சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். அடிபட்டு கீழே விழுந்தவரை யார் யார் தண்ணீர் கொடுத்து உட்காரவைத்தார்கள் என்று புகாரில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் தண்ணீர் கொடுத்தோம் என்று தன்னையும் குறிப்பிட்டு சொல்லியுள்ளார் மற்றவர்கள் யார் யார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. இறந்துபோனது குறித்து உறவினர்களுக்கு குறிப்பாக யாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து எதிரி எந்த திசையை நோக்கி ஓடினார் என்று குறிப்பாக திசை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்த ரோட்டில் ஓடினார் என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் இறந்துபோனவரின் நெஞ்சில் எதிரி அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அடிபட்டவர் அடிபட்ட இடத்திலிருந்து எழுந்துசென்று சமுதாய கூடத்தில் எந்த பகுதியில் படுத்துக்கொண்டார் என்றும் புகாரில் சொல்லவில்லை என்றால் அருகில் படுத்திருந்ததாகத்தான் சொல்லப்பட்டுள்ளது திசை சொல்லவில்லை. எத்தனை மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் 21.00 மணிக்கு கொடுக்கப்பட்டது. அ.சா.ஆ.1 புகாரை வரும்போதே எழுதி கொண்டு வரப்பட்டதா அல்லது காவல்நிலையம் வந்து எழுதப்பட்டதா என்றால் வரும்போதே எழுதி கொண்டுவரப்பட்டது. சம்பவ இடத்தில் வசந்தி என்பவர் இருந்ததாகவோ, வந்ததாகவோ சொல்லவில்லை என்றால் வசந்தியின் வீட்டிற்கு முன்பு வசந்தியை கூப்பிட்டார் என்று சொல்லியுள்ளார். வசந்தி இருந்ததாக அல்லது வந்ததாக எதுவும் சொல்லவில்லை, வருவதற்குள் அடித்துவிட்டார் என்று சொல்லப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் சத்தம் போட்டு யார் யார் வந்தார்கள்

என்று புகாரில் சொல்லவில்லை என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்ய எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் முக்கால் மணிநேரம் ஆனது. புகாரை நீதிமன்றத்திற்கு எப்போது அனுப்பட்டது என்றால் அன்றைய தினமே துரித தபால் மூலம் அனுப்பப்பட்டது. நான் சொன்ன தேதியில், நேரத்தில் புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**